தனி பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

E WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களு...**

**சகல ஞானத்தோடும் பரிபூரணமாக**

**வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

**2008**
**ஜூன்**

மரம் 8
கனி 7


சிரியர்
அர்ஜூனன்

நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் – மாற்கு 16:15



## The Second Preacher`s Family Fellowship Meeting
## KODAIKANAL

MAY



2008

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது – சங்கீதம் 133:1

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 ஜூன் - 2008 கனி - 7


ஆசிரியருரை

## உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்...

### Even You, Atleast In This Your Day...



**நம்மை** உண்டாக்கிய தேவன் நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவோ நாட்களை கூட்டி வழங்கிவருகிறார். இதை நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? நமக்கு இருக்கும் வேலைகளை செய்வதற்கே நேரமில்லை பின்பு இவைகளை எங்கே சிந்திக்க நேரம் இருக்கிறது என்பீர்கள். நாட்கள் நம்முடையதல்ல அது கர்த்தருடையது. நமக்கு கிடைத்த ஒவ்வொரு நாட்களையும் நாம் எவ்விதம் பயன்படுத்துகிறோம். சிலர் பொழுது போகவில்லை என்பர். அநேகர் நேரம் போதவில்லை என்பர். உங்களுடைய வாழ்க்கையில் நேரம் எப்படி போய்க்கொண்டிருக்கிறது? தேவன், இஸ்ரவேல் ஜனங்களை நேசித்து, எருசலேமை தம்முடைய நகரமாக தேர்ந்தெடுத்து, அநேக தீர்க்கதரிசிகளின் மூலம் தம்முடைய வார்த்தைகளைக் கொடுத்துக்கொண்டு வந்தார். இறுதியில் தம்முடைய குமாரனையே அனுப்பினார். அதுமட்டும் மனந்திரும்பாத, அநேக அற்புதங்களைக் கண்டும் விசுவாசிக்காத, அந்த ஜனங்களைக் கண்ட கர்த்தர்; "சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயனால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது" என்றார் (லூக்.19:41,42).

**உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்** என்று கர்த்தர் சொல்வதற்கான காரணம் என்னவென்று நாம் தியானிக்கும்போது, எவ்வளவோ நாட்களை இஸ்ரவேலர் வீணாக்கிக்கொண்டே வந்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. மனந்திரும்பும்படியாக தம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு எச்சரித்து வந்தும், அவர்கள்

வணங்காகழுத்துள்ளவர்களானபடியால் தங்களுடைய இருதயத்தை வைரமாக்கினார்கள். ஆகையால் சத்துருக்களுக்கு ஒப்புக்கொடுத்தார். பல முறை எருசலேம் மதிற்சுவர்கள் இடிக்கப்பட்டு, அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது. நெகேமியா போன்றோரால் எடுத்து கட்டப்பட்டது. தேவாலயங்கள் பழுது பார்க்கப்பட்டது. இந்த எருசலேமைப்பார்த்து: உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் என்கிறார். பேதுரு தீர்க்கதரிசிகளைக் குறித்து சொல்லும்போது; "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென் பதையும் ஆராய்ந்தார்கள்" என்று 1பேது.1:10,11 -வசனங்களில் வாசிக்கிறோம். தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை செய்திருக்கும்போது நமக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் இவைகளைக் குறித்து நாம் தியானிக்க வேண்டாமா?

"நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" என்று யாக்கோபு4:14-ல் வாசிக்கிறோம். மனிதன் ஒரு நாள் பிறப்பதை அறியான். ஆனால் மனிதர்கள் ஜோசியரையும், கைரேகை பார்ப்பவர்களையும் அநுதினமும் நாடுகிறார்கள். எந்த ஒரு ஜோசியனுக்கும் நாளைக்கு என்ன நடக்கும் என்பது தெரியாது. அப்படி ஒருவன் சொல்வானேயானால் ஏன் சுனாமி எச்சரிப்பை அவன் சொல்லவில்லை, பூகம்பங்களை அவன் சொல்லவில்லை ஏன்? அப்படி சொல்லியிருப்பானேயானால் அநேகர் காப்பாற்றப்பட்டு இருப்பார்கள் அல்லவா? அன்பு சகோதரனே, சகோதரியே நீங்கள் சற்று சிந்திக்கவேண்டும். தேவன் மனிதனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார். ஆகையால் உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் விட மனிதனை அவர் அதிகம் நேசித்தார். அவன் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காகவே அநேக போதனைகளை அவனுக்கு கொடுத்துக்கொண்டே வருகிறார். எந்த ஒரு தகப்பனும் தான் பெற்றெடுத்த மகனுக்கு துரோகம் செய்வானா? ஆண்டவரும்கூட உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளு கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்கிறார். உங்களுக்கு கொடுக்கப்பட்ட இந்த நாளிலாகிலும் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? என்பதை சற்று சிந்திக்கும்படியாக உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

அடுத்தபடியாக, உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயனால் நலமாயிருக்கும் என்கிறார். இது சமாதானத்துக்கு ஏற்றகாரியங்களை சிந்திக்கும் காலம். போனது போகட்டும் நடக்கவிருக்கும் காரியங்களை சிந்தியுங்கள். அவைகளுக்கு ஏற்றபடியாக உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் சமாதானத்துக்கு ஏற்றகாரியங்களை சிந்திக்காதபடியால் சண்டைகளும், வன்முறைகளும், யுத்தங்களும் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. தேவன் தெரிந்து கொண்ட எருசலேம் நகரம் சந்திக்காத யுத்தமில்லை என்றே சொல்லவேண்டும். அத்தனை யுத்தங்களை சந்தித்த எருசலேம் பட்டணம் சமாதானத்துக்கு ஏற்றவைகளை சிந்திக்க தவறிவிட்டது. ஆனால் நினிவே பட்டணத்தை நாம் கவனிப்போமானால், அந்த பட்டணத்து அக்கிரமம் தேவ சமுகத்தை எட்டினது, அதற்கு விரோதமாய்ப் பிரசங்கிக்கும்படி யோனா அனுப்பப்பட்டார். மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமான நினிவேயில் யோனா பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம்பண்ணி; இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படி கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் முடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அந்தப்படியே அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். நினிவேயின் மக்களுக்கு இரங்கின தேவன் உங்களுக்கும் எனக்கும் இரக்கம் செய்ய முடியும். எப்பொழுது என்றால் நாம் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நினைத்து மனந்திரும்பும்போது,


ஒரு வீட்டில் சமாதானமும் சந்தோஷமும் எப்பொழுது இல்லாமற்போகிறது? சண்டையும் சச்சரவுகளும் வரும்போது சமாதான குறைவு ஏற்படுகிறது. "ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே" என்று கர்த்தர் சொல்லுகிறார் *(மாற்.3:25)*. ஒருவன் கொட்டுப்போவதற்கு மற்றொருவன் வந்து அதற்கு விரோதமாக செயல்பட வேண்டிய

அவசியமில்லை. அதில் உள்ள ஒருவர் அதற்கு விரோதமாக செயல்பட்டால் போதும் அந்த வீடு நிலைநிற்காமற்போய்விடும். ஆகையால் தான் கர்த்தர் தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பியபோது, "ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அதை வாழ்த்துங்கள். அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது" என்றார் (மத்.10:12,13). குடும்பங்கள் சமாதானம் அடையவும், கர்த்தருடைய சீஷர்களால் ஆசீர்வதிக்கப்படவும் தம்முடைய சீஷர்களை உலகமெங்கும் அனுப்பினார். இவர்களை ஏற்றுக்கொண்டு நாடும், குடும்பங்களும் இன்றளவும் ஆசீர்வதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. அன்பான தேவ ஜனமே, நீங்கள் கர்த்தரால் அனுப்பப்படும் தேவதாசர்களை அன்போடு ஏற்றுக்கொண்டு அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சமாதானத்துக்கானவைகளை சிந்தியுங்கள். அப்பொழுது அது உங்களுடைய ஜீவியத்திற்கு நலமாயிருக்கும். பட்டயத்தை எடுக்கிறவன் பட்டயத்தினால் மடிந்துபோவான். சமாதான பட்டயத்தை எடுத்துக்கொள்வாயானால் நாடும், வீடும், நீங்களும் சமாதானம் பெறுவீர்கள்.

மேலும், **இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது** என்கிறார். ஆம், அவைகள் நம் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" என்று பவுல் குறிப்பிடுகிறார் (2கொரி.4:4). அதிமுதலாக கர்த்தருக்கு விரோதமாக செயல்படும் பிசாசு இக்காரியத்தை செய்கிறான். ஜனங்கள் நலமான காரியங்களை பார்க்கக்கூடாதபடி மறைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று அநேகர் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் அறியாமல் மூழ்கிப்போய் கிடப்பதற்கு இதுவே காரணம்! உலகம் உலகத்தைப் பார்க்கிறது, உலகத்தை சிநேகிக்கிறது. ஆனால், உலகத்தில் வந்த சத்தியபரராகிய இயேசுவையும், அவர் மனிதனை மீட்க தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்த அந்த மாபெரும் சம்பவத்தையும் நினைக்க தவறிவிட்டது. "காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என வேதம் போதிக்கிறது (2கொரி.4:18). ஆகையால், காணப்படாத பரலோக வாழ்வை நோக்கிப்பார்த்து, உங்களுக்கு கிடைத்த இந்த நாட்களில் உங்கள் சமாதானத்துக்கு ஏற்றவைகளை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வீடும் நாடும் சமாதானம் அடைய நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# புதிய சபைகளை ஸ்தாபித்தல்

## *Establising New Congregations* -J.C.Choate



உலகத்தின் ஒரு பாகத்திலே சபையானது துவக்க நிலையில் இருந்து வளர்ந்து வரும்போது, அது சிறப்பாக வளர்ந்த நிலையில் அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தும் உற்சாகமுள்ள பிரசங்கியாரும் சுவிசேஷகர்களும் புதிய சபைகளை ஸ்தாபிப்பதிலும் ஆர்வமுள்ளவராக இருக்க வேண்டும். ஒரு பெரு நகரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பிராந்திய சபை இருக்க வேண்டும் அதே விதமாகத்தான் பக்கத்து நகரங்களிலும் கிராமங்களிலும் கூட சபைகள் இருக்க வேண்டும். அதன் பொருள் என்னவென்றால் முன்னமே இருக்கக் கூடிய சபையில் ஊழியம் செய்யும் படியாக நிறைய பிரசங்கியார்கள் இருக்க வேண்டும். ஆனால் புதிய சபைகளை தொடங்கும்படி மற்ற இடங்களுக்கும் செல்லவேண்டும். ஒவ்வொரு ஆத்துமா இரட்சிக்கப்படுவதோடும், ஒவ்வொரு புதிய சபை ஸ்தாபிக்கப்படுவதோடும், அவர்கள் தங்கள் பணிக்கு புதிய வேகத்தைக் கூட்டுவதோடும், நடக்கின்ற வேலைகளைத் தாங்களாகவும் செய்யலாம். உதாரணமாக, ஒரு பிரசங்கியாரைத் தாங்குவதற்கு ஆயிரம் அங்கத்தினர்கள் தேவையில்லை அல்லது சில நூறு அங்கத்தினர்களோ அல்லது நூறு அங்கத்தினர்களோ கூட தேவையில்லை உண்மையாகவே அதாவது வேதாகமம் போதிக்கிறபடி கொடுத்தால் பிரசங்கியாரைத் தாங்குவதற்கு அதிக எண்ணிக்கையுள்ள அங்கத்தினரைக் கொண்ட பிராந்திய சபைதான் உதவி செய்ய போதுமான நிதி கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. அங்கத்தினர்கள் அவர்கள் பிரசங்கியாருக்கு உணவு, உடை போன்றவைகளை அளிப்பதன் மூலம் தாங்கலாம். நமக்கு உண்மையாகவே சுவிசேஷத்தைப் பரப்பும்படியாக உற்காசமுள்ள ஆவி இருக்குமானால் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பரப்புவதற்கான காரியங்கள் நடைபெறத் துவங்கும்.

ஒரு பிரசங்கியாராக நீங்கள் ஆத்துமாக்களை கிறிஸ்துவிடமாக அல்லது கிறிஸ்துவிற்குள் இரட்சிக்கப்டும்படியாக நடத்துவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் இருக்கின்ற பகுதியிலே சபையானது ஸ்தாபிக்கப்படாமலிருந்தால் அங்குள்ள கிறிஸ்தவர்களை ஒருங்கிணைத்து ஒரு பிராந்திய சபையை உருவாக்க வேண்டும். நீங்கள் ஒரு பிராந்திய சபையிலே ஊழியம் செய்து கொண்டிருந்தாலும் கூட புதிய இடத்திலே சபையைத் தொடங்கும்படியான வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

சுவிசேஷப்பணி என்பது சபையினுடைய உயிர் மூச்சாக இருக்கின்றது. அது தன்னுடைய அங்கத்தினர்களுக்கு செய்யும் படியான ஊழியப்பணிகளையும், அது இருப்பதற்கான நோக்கத்தையும் பிரயாசப்படும்படியான ஒரு இலக்கையும் கொடுக்கிறது. நாம் வாழ்வது மற்றவர்கள் வாழும்படியாக உதவுவதற்கே. பிரசங்கியார்களும், ஊழியத்திற்கென்றே தங்களை அர்ப்பணித்து பல இடங்களுக்குச் சென்று ஊழியம் செய்பவர்களும் இதில் முதன்மையாக இருந்தாலும் எல்லா அங்கத்தினர்களும் இதைத் தாங்க வேண்டும் இதிலே ஒரு பங்கிருந்து அது கொண்டுவரும் பலனைக் காணும் போது மகிழ்ச்சியும் சந்தோஷமும் உற்சாகமும் பெலமும் உண்டாகும். நீங்கள் அப்போஸ்தலரின் நடவடிக்கை புஸ்தகத்தைக் கவனமாக படித்துப்பார்த்தால் கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்த பின்பு வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளிலே எருசலேம் நகரத்திலே சபை தொடங்கியதைக் காணலாம். நீங்கள் தொடர்ந்து படிக்கும் பொழுது மற்ற நகரங்களுக்கும் பகுதிகளுக்கும் சுவிசேஷமானது கொண்டு செல்லப்பட்ட போதும் மக்கள் கீழ்படிந்தபோதும் அந்தப்பகுதியில் சபையானது ஸ்தாபிக்கப்பட்டது. பவுலும் அவரோடு கூட சுவிசேஷப் பிரயாணம் சென்றவர்களும் ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் மேலும் அவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் கர்த்தருடைய சபையானது ஸ்தாபிக்கபட்டது. அவர்களோடு மட்டுமல்லாமல் மற்ற அப்போஸ்தலர்களும் மேலும் பல பிரசங்கியார்களும் பல இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது அப்படியே நிகழ்ந்தது. அது அதிசீக்கிரமாக இந்த சுவிசேஷப்பணி வானத்தின் கீழ் உள்ள சகல சிருஷ்டிகளுக்கும் முப்பது ஆண்டுகளுக்குள் சென்றடைந்தது (கொலோ.1:23). நூற்றுக்கணக்கில் மேலும் பல ஆயிரக்கணக்கில் கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

அந்நாட்களிலே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதும் கிறிஸ்துவின் சபைகளை ஸ்தாபிப்பதும் எளிதானதாய் இல்லை. அவர்கள் பலவிதமான எதிர்ப்புகளை சந்தித்தார்கள். அநேகர் துன்பப்படுத்தப் பட்டார்கள் பலர் தங்கள் விசுவாசத்திற்காக கொல்லப்பட்டார்கள் ஆனால் இவைகளெல்லாம் அவர்களுடைய பணியை நிறுத்த முடியவில்லை. இந்த விதமான எதிர்ப்புகள் சுவிசேஷப்பணியை அனல் மூட்டி உலகமெங்கிலும் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்க ஏதுவாய் இருந்தது. மறுபடியும் இப்படிப்பட்டவைகளைக் குறித்து அப்போஸ்தலர் புஸ்தகத்தில் நிறைய படிக்கலாம். பேதுருவுக்கும் யோவானுக்கும் (அப்போஸ்தலர் 3:4) நிகழ்ந்தது, ஸ்தேவான் கல்லெறியுண்டது (அப்போ 7) யாக்கோபு கொல்லப்பட்டது. (அப்போஸ்தலா 21) இன்னும் பவுல் பட்ட எல்லா துன்பங்களைப்பற்றியும் பார்க்கலாம்.

அவர்களுக்கு ஊழியஞ்செய்யும்படியாக அதிக வசதிகள் இருந்ததில்லை பிரசங்கியார்கள் சம்பளம் பெறும் முறையில் வேலை செய்யவில்லை இருந்த போதிலும் சிலர் தாங்கினார்கள். நிச்சயமாக அவர்களுடைய செலவுகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வெளிநாடுகள் அன்று இல்லை. அவர்களுக்கு சபை கூடிவரும்படியான கட்டடங்கள் இல்லை. வீடுகளிலும் பொதுக்கூட்டங்களிலும் அல்லது ஜனங்கள் கூடிவருகின்ற பொது இடங்களிலும் அவர்களுக்குப் பிரசங்கியார் பயிற்சிப் பள்ளிகளோ கிறிஸ்தவக் கல்லூரிகளோ மேலும் நாம் இன்றைக்கு இருக்கவேண்டும் என்று நினைக்கின்ற வசதிகளோ அவர்களுக்கு இல்லை. இருப்பினும் அவர்கள் வெளியே புறப்பட்டுச் சென்று சுவிசேஷப்பணியை செய்தார்கள்.

இப்படி இருந்த போதிலும் கூட, அவர்களுக்கு என்ன இருந்தது என்பதை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களுக்கு தேவன் பேரில் விசுவாசமும், மனிதர்களுடைய ஆத்துமாக்களிலும் கர்த்தரிலும் அன்பும், அவர்களிடம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடிய ஆர்வமும் இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்கிற தீர்மானமும் இருந்தது. இந்தப் பணியைச் செய்யும்படியாக துன்பப்படவும் அவமதிக்கப்படவும் அல்லது எதையும் சந்திக்கவும் அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்கள் இல்லை என்ற பதிலை சொல்ல விருப்பமில்லாதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் இந்தப் பணி செய்யப்படமுடியும் என்று நம்பினார்கள், அப்படியே செய்தார்கள். அவர்கள் அதை நிறுத்தவோ, செய்யாமலிருக்கவோ விட்டுவிடவோ, பின்னிட்டுப் போகவோ, சாக்குப்போக்குகளைச் சொல்லவோ அல்லது தொடர்ந்து செயல்படாமல் இருக்கவோ இல்லை. அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்கள்! நமக்கு எப்பேர்பட்ட மாதிரிகளை வைத்திருக்கிறார்கள்! அவர்கள் உலகத்தை மாற்றினார்கள். அதன் நன்மைகளையெல்லாம் நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இன்றும் கர்த்தர் நமக்கு சொல்லிக்கொண்டிருப்பது என்னவென்றால் நீங்கள் உலகமெங்கும்புறப்பட்டுப்போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்பதே (மாற்கு 16:15-16). இன்னுங்கூட மக்கள் இழந்துபோன நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும். இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் தான் இந்தப்பணியைச் செய்ய கட்டளையிடப்பட்டிருக்கிறோம். நீங்கள் அப்போஸ்தலர் நடபடிக்கைப் புஸ்தகத்தை மறுபடியும் படித்துப் பார்த்தால் அதே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. அப்போஸ்தலர்களும் அவர்களால் மனமாற்றப்பட்டவர்களும் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கே கூடி இருந்த மக்களில் விசுவாசித்தவர்கள் தங்கள் பாவங்களை விட்டு மனம் திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து தங்கள் பாவங்கள் கழுவப்படும்படியாக ஞானஸ்நானம்

பெற்றார்கள். கர்த்தர் அவர்களை இரட்சித்து அவருடைய சபையில் சேர்த்தார்(அப்போஸ் 2). நீங்கள் கவனிக்கிறபடி வேதவசனங்கள் ஆயிரக்கணக்கானோர் கீழ்ப்படிந்ததையும், அநேகர் சபையில் சேர்க்கப்பட்டதையும் அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை வளர்ச்சி அடைந்ததையும், சொல்லுவதைக் காணலாம். அதன் விளைவாக இந்தப் பகுதிகளில் இரண்டு அல்லது மூன்று பேர் ஒவ்வொருமுறையும் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததின் காரணமாக அங்கே சபையானது ஸ்தாபிக்கப்படுகிறது. பொதுவாக இப்படிப்பட்ட சபைகள் சில அங்கத்தினர்களோடு தொடங்குகிறது. அது என்ன வென்றால் அவர்கள் ஒவ்வொரு வாரமும் தொழுது கொள்ளும்படியாக கூடி வருவார்கள். சபையானது எண்ணிக்கையிலே பெருகும் போது தகுதியுள்ளவர்கள் இருந்தால் அவர்கள் மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும் சபைக்குத் தலைமை ஏற்று நடத்தும்படி அங்கத்தினர்களால் நியமிக்கப்படுகிறார்கள். பிரசங்கியார்களும், போதகர்களும், மற்றபொறுப்புகளை ஏற்று செயல்பட்டவர்களும் இருந்தார்கள் அந்த வண்ணமாக அவர்கள் வளர்ச்சியடைந்து சுவிசேஷத்தை தங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிரசங்கித்து மற்ற இடங்களில் கிறிஸ்துவின் சபைகளை ஸ்தாபித்தார்கள். இப்பொழுது இதுவே தேவையாய் இருக்கிறது. நீங்கள் இருக்கின்ற இடங்களில் ·சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள்ளாக நடத்தி சபையை ஸ்தாபியுங்கள் கீழ்ப்படிகிறவர்கள் தொழுது கொள்ளத் தொடங்கி தாங்கள் இருக்கின்ற இடங்களில் ஊழியம் செய்யலாம்.

உலகத்தை சுவிசேஷமயமாக்கும்படி செயல்படுவதற்குத் தேவையான சகலத்தையும் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்திருக்கிறார். அதிக முக்கியமான பணம், கட்டிடம், போக்குவரத்து வசதிகள், இன்னும் அதிகமாக விசுவாசம், மிகுந்த ஆர்வம், அன்பு, தைரியம் மேலும் கர்த்தருக்கு ஊழியம் செய்து அவருடைய சுவிசேஷத்தைப் பரப்பும் படியான தீர்மானத்தையும் கொடுத்திருக்கிறார். நீங்கள் அதைச் செய்ய முடியாவிட்டால் எந்த வகையில் கர்த்தருக்குப் பிரயோஜனமுள்ளவராக இருக்க முடியும்?

## நடப்புச் செய்திகள்

- ☆ கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய சிறுபாண்மை சமுதாயத்தினருக்கு தலா3.5 சதவீதம் இடஒதுக்கீடு வழங்குவதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.
- ☆ 240 ஆண்டு மன்னராட்சி முடிவுக்கு வந்து குடியரசு நாடானது நேபாளம்.
- ☆ அமெரிக்கா அனுப்பிய 'பீனிக்ஸ்' ஆய்வுகலம், 67கோடி கி.மீ துரத்தை 10 மாத பயணத்திற்கு பின்பு செவ்வாய் கிரகத்தின் வடதுருவத்தில் பத்திரமாக தரையிறங்கியது.

பெண்கள் பகுதி

# கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நம்மில் தேவன் என்ன எதிர்பார்க்கிறார்?

# What Does God Require of Us As Christian Women?

*-Betty*



**தா**ய்மார்களாகிய நீங்கள் உங்கள் குழந்தைகள் நாளுக்குநாள் வளரவேண்டுமென விரும்புவீர்கள். தேவனும் தம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய வகையில் வளர வேண்டுமென எதிர்பார்க்கிறார். எவ்வாறு ஒரு குழந்தைக்குப் பசி வந்ததும் அது குவா, குவா எனக் கத்தி அழுது பாலுக்கு வாஞ்சிப்பது போல தேவனுடைய குடும்பமாகிய சபையில் பிறந்துள்ள கிறிஸ்துவ ஸ்திரீகளும் திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையுள்ளவர்களாயிருந்து அதைப் பருகி வளர வேண்டுமென தேவன் விரும்புகிறார். 1பேது.2:3-ல் "நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" எனக் கூறப்பட்டுள்ளது. ஞாஸ்நானத்தில் தேவனுடைய குடும்பத்தில் புதிதாக பிறந்துள்ள ஒவ்வொருவரும் இவ்விதமாக திருவனத்தின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும். மாம்சத்தில் பிறந்த ஒரு குழந்தை பாலின்மேல் எவ்வளவு வாஞ்சையாயிருக்குமோ அவ்விதமே ஒவ்வொருவரும் ஞானப்பாலின் மேலின் மேல் வாஞ்சையாயிருக்கவேண்டும்.

அப்படியிருக்கும்போது பாவத்தை விட்டு நாம் விலகியிருக்க முடியும். நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய குடும்பத்தில் அதாவது தேவனுடைய ராஜ்யத்தில் பிறக்கவேண்டும். யோவான் 3:3-ல் "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்". தேவனை துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் அப்.2:47. எனவே அவருடைய குடும்பத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் போது நாம் புதிதாக அவருடைய ராஜ்யமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறோம். ஞானஸ்நானத்தில் இவ்விதமாக தேவனுடைய குடும்பத்தில் பிறக்கிறோம். இந்தக் குடும்பம் இயேசுவினால் சம்பாதித்துக்கொள்ளப் பட்ட குடும்பம்.

தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒவ்வொருவரும் வளர வேண்டியவர்களாயிருக்கிறோம். திருவசனமாகிய ஞானப்பாலை பருகி வளர வேண்டும். தேவனுடைய வசனத்தை வாசித்து வளரவேண்டும். பசியுடனிருக்கும் ஒரு குழந்தை பாலுக்கு ஆவலாயிருக்கும். பாலைக் குடித்து வளரும் குழந்தை மட்டுமே புஷ்டியாக இருக்க முடியும். ஆகவே நாமும் தேவ வசனத்தின் மேல் வாஞ்சையாயிருந்து கற்றுக்கொண்டு வளர வேண்டும். தாகமும் பசியுமுள்ள குழந்தையை போல வேத வசனத்தின் மேல் வாஞ்சையாயிருந்து கற்றுக்கொண்டு வளருவதையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். இது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமானது.

*எபி.5:14* "பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்". நாம் நன்மை தீமை எதுவென்று அறிய பயிற்சி செய்யவேண்டும். தேவனுடைய வசனமாகிய பலமான ஆகாரத்தைப் புசிக்கும் போது நாம் நன்மை தீமை இன்னதென்று அறிந்துகொள்ளமுடியும். தேவனுடைய வசனத்தைக் கற்று அதை நம்மில் பயிற்சி செய்து வளரும்போது இவ்விதமாக நன்மை எது தீமை எது, என்பதை அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு தேவ வசனத்தைக் கற்று பயிற்சிக்கும்படி தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். 1பேது.*2:2* திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையா யிருக்கும்படிக்கும் எபி.*5:14*-ல் நாம் தேவ வசனத்தைக் கற்று பயிற்சி செய்யும்படிக்கும் அறிவுறுத்துகிறது. அப்போதுதான் நன்மை தீமை இன்னதென்று பகுத்துணர்ந்து கொள்ளமுடியும்.

கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்கும் அதிகமான வேறுபாடுகள் உண்டு. சமுதாயம் கிறிஸ்தவர்களிடம் அதிகமான நற்காரியங்களை எதிர்பார்க்கிறது (எபே.*4:17-25*). "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" எனக்கூறுகிறது. தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒவ்வொருவரும் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளவேண்டும். தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவ ஸ்திரீயும் பொய்யைக் களையவேண்டும். அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் மற்றவர்களுடனே பொய் பேசுகின்றனர். ஆனால் கிறிஸ்வர்களாகிய நாம் பொய் பேசக் கூடாது. நீங்கள் உங்களுடைய அயலகத்தாருடன் பொய் பேசுகிறீர்களா? அப்படி பேசுவீர்களானால் கிறிஸ்தவரல்லாதவர்கள் உங்களைக் குறித்து ஏளனமாய் பேசுவார்கள். கிறிஸ்தவர்கள் பொய் பேசக்கூடாது. மற்றவர்களுடனும் அண்டை வீட்டாருடனும் மெய்யைப் பேசவேண்டும்.

நீங்கள் கோபங்கொள்ளுகிறீர்களா? யாருடனாவது சண்டை போடுகிறீர்களா? சில ஸ்திரீகள் தங்கள் கணவன் மார்களோடும் கோபங்கொண்டு சண்டையிடுவார்கள். மாம்சத்திலிருப்பதினால் சில நேரங்களில் இவ்விதமாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய கோபம், எரிச்சல் நாம் படுக்கைக்குச் செல்லும்முன் தணிய வேண்டும். நாம் கோபத்துடனே படுக்கைக்குச் செல்வோமேயானால் மறுநாள் காலையில் அந்தக் கோபம் மிகவும் அதிகரித்து, ஆழமுடையதாகவு மிருக்கும். அதனால் ஆவியில் மட்டுமல்ல சரீரத்திலும் வியாதியுள்ளவர் களாய் மாறிவிடுவோம். கோபம் நம்முடைய சரீரத்திற்கு அல்சர், இரத்தக்கொதிப்பு, தலைவலி போன்ற நோய்களைக் கொண்டுவரும். இவ்விதமாகக் கோபங்கொள்ளும்போது நாம் பிசாசுக்கும் இடங்கொடுத்துவிடுவோம். கோபம் பலவிதமான தீமைகளை நம்முடைய ஆவியிலும் சரீரத்திலும் கொண்டுவந்து விடுகிறது. ஸ்திரீகள் தங்களுடைய புருஷர்களோடு எப்போதும் சந்தோஷத்துடனும் சிரித்த முகத்துடனும் நடந்து கொள்ளவேண்டும். கோபத்தை நம்மை விட்டு விலக்கவேண்டும். நல்ல மனைவியாக ஒரு சிறந்த மாதிரியாக நாம் நடந்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான் நாம் பிசாசுக்கு இடங்கொடாமலிருக்க முடியும்.

கிறிஸ்தவ ஸ்திரீகள் நேர்மையான முறையில் வேலை செய்து பிரயாசப்பட வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். எபே.26-ல் திருடுகிறவன் இனித்திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்க தாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன் எனக்கூறுகிறது. ஏவாளும் கூட இச்சித்து சோதனைக்கு இடங்கொடுத்துப் பாவம் செய்தாள். பிசாசுக்கு இடங்கொடாமல் நம்முடைய கைகளினால் வேலை செய்து பிரயாசப்படவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நீங்கள் கெட்ட வார்த்தைகள் பேசுகிறீர்களா? சிலர் கெட்ட வார்த்தைகள் பேசுகின்றனர். தங்களுடைய அண்டை வீட்டாருடன் பக்திவிருத்திக்கு ஏதுவாக நல்ல வார்த்தைகளையே பேசவேண்டும் (வச.29). இன்னும் சில கிறிஸ்தவ ஸ்திரீகள் புறங்கூறி திரிகிறார்கள். நீங்கள் உங்கள் அண்டை வீட்டாரைக் குறித்து புறங்கூறி திரிகிறீர்களா? இதை தேவன் வெறுக்கிறார். இது மற்றவர்களும் கிறிஸ்தவர்களைக் குறித்து தவறாகப் பேச ஏதுவுண்டாக்கும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார் (எபே.4:15).

இது மாத்திரமல்ல நாம் கனி கொடுக்க வேண்டுமெனவும் தேவன் எதிர்பார்க்கிறார். "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த

கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவா.15:5) என்றார். மேலும் "நான் மெய்யான திராட்சச்செடி, என்பிதாதிராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்;" (யோவா.15:1,2). எனவே நாம் இயேசுவில் நிலைத்திருந்து கனி கொடுக்கவேண்டும். "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவா.15:8) என்றார். நாமும் இயேசுவின் சீஷர்களாயிருந்து மிகுந்த கனிகளைக் கொடுக்கவேண்டும். அவரில் நிலைத்திருந்து அதிகமான கனிகளைக் கொடுக்கவேண்டும்.

நாம் அவருடைய சீஷர்களாயிருப்போமானால் யோவான்13:34,35 கூறுவதுபோல நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும். இயேசுநம்மில் அன்பாயிருப்பதுபோல் நாமும் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கவேண்டும். அப்படியிருக்கும் போது மற்றவர்கள் நாம் இயேசுவின் சீஷர்களென அறிந்து கொள்ளுவார்கள். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்... நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்" (யோவா.13:34-35). கிறிஸ்தவர்கள் இவ்விதமாக இருக்கவேண்டும்.

தேவன் நமது பிதாவாயிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். கிறிஸ்து நமது சகோதரராயிருக்கிறார். நாம் தேவனுடைய குடும்பத்தில் அதாவது தேவனுடைய ராஜ்யமாகிய அவருடைய சபையில் பிள்ளைகளாயிருக்கிறோம். கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் ஒவ்வொருவரும் வேத வசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருந்து, அதைக் கற்று, நன்மை தீமை இன்னதென்பதை பகுத்துணர்ந்து, வளர்ந்து, கனி கொடுத்து இயேசுவின் சீஷர்களாய் தேவனுடைய குடும்பத்தில் நிலைத்திருப்பதையே தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார்.

இச்செய்தியை, சகோதரி பெட்டி அவர்கள் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெற்ற பெண்களுக்காக சிறப்புக்கூட்டத்தில் கொடுத்தார்கள்.

அன்பு தேவமக்களே,

**HOME OF LOVE**

தாய் தந்தையற்ற மற்றும் ஏழை சிறுவர், சிறுமிகளையும் கைவிடப்பட்ட தாய்மார்களையும் சேர்த்துக்கொள்ள திட்டமிட்டிருக்கிறோம். புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும். கல்வி, மற்றும் உணவு உடை இலவசமாக வழங்கப்படும். மிக குறைந்த இடங்களே உள்ளன.

Contact: Principal, Home of Love, Orphanage
John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378







# நீங்கள் தேவை

## *You Are Wanted*

*-Glory Arjunan*

அன்பு சகோதரியே, நீங்கள் தேவை. இது விளம்பரம் போலிருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? இது ஒரு சாதாரண கம்பெனியின் விளம்பரமோ அல்லது ஒரு தொழிலுக்கான விளம்பரமோ அல்ல. நீங்கள் இயேசுவுக்கு தேவை. அவர் உங்களை பராமரித்து போஷித்து காப்பாற்றும் ஆண்டவர். அவருக்கு நீங்கள் இன்று மிக அதிகமாகத் தேவைப்படுகிறீர்கள். அவரது அழைப்பின் குரல் கேட்கின்றதா? ஒருவேளை நீங்கள் தேவனை அறிந்தவர்களாயிருக்கலாம், அல்லது தேவனை அறியாதவர்களாயிருக்கலாம்.நீங்கள் யாராகயிருந்தாலும் சரி, எவ்வாறாக இருந்தாலும் சரி இயேசுவின் அரசாங்கத்திற்குள் வரவிரும்புகிற ஒருவரையும் அவர் புறம்பே தள்ளுகிறவரல்ல. இன்று உலகவேலைகளுக்காக, உலகத்தில் அந்தஸ்தைப் பெறுவதற்காக பல தகுதிகளோடு அலைந்து திரிகிறவர்களை அநுதினமும் காண்கிறோம். ஆனால், ஒருவரும் எதிலும் திருப்தியடையமுடிவதில்லை. பிரசங்கி என்ற வேதாகமப் புத்தகத்தில் ஞானியான சாலொமோன் ராஜா, “சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது” என்றார் *(பிர.1:14)*.

அன்பு மகளே, என் அன்பு சகோதரியே, நான் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் படித்தேன், எல்லாம் வீணாய் போயிற்றே, என் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே, அல்லது கிடைத்திருக்கிற வேலையும் திருப்தி அளிக்கவில்லையே என்று புலம்புகிறாயா? “அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவு பெருத்தவன்” *(பிர.1:18)*. ஆனால் உன்னை உண்டாக்கின தேவனுக்கு நீ தேவை, அவர் உன்னை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். அன்று இயேசுவுக்கு ஒரு கழுதைக் குட்டி தேவைப்பட்டது. “...மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள்... இது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்;...” *(மாற்.11:2,3)* என்றார். “அவர்கள் அந்தக்குட்டியை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து, அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின் மேல் ஏறிப்போனார்” *(மாற்.11:7)*. அந்த கழுதைக்குட்டி இயேசுவை சுமந்துசென்று தீர்க்கதரிசனம் நிறைவேற உதவியது. அந்த கழுதைக்

குட்டியைப்போல இயேசுவின் சுவிசேஷத்தை சுமந்து சொல்ல நீங்கள் தேவை! இயேசுவுக்காக இந்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள நீங்கள் தேவை!! இயேசு கிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்தவர். மனுக்குலத்தின் பாவத்தைப் போக்க தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தவர். அது மாத்திரமல்ல, மரித்தும் மூன்றாம் நாள் உயிரோடெழுந்து இன்றும் உயிருள்ளவராகவும் நம்மை காத்து இரட்சிக்கிறவராகவுமிருக்கிறார். இந்த சுவிசேஷத்தை சுமந்து சென்று இயேசுவை இந்த தேசத்திற்கு அறிமுகம் செய்ய நீங்கள் தேவை. இயேசு அனைவருக்கும் தேவையுள்ளவராயிருக்கிறார். ஏனெனில் இயேசு கிறிஸ்து ஒருவரே சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்து பாவத்தின் கொடூரபிடியிலிருந்தும், பாவத்தினால் உண்டாகும் மனவேதனையிலிருந்தும் ஒவ்வொருவரையும் மீட்கக்கூடியவர். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் தேசத்திற்கு சமாதானம் உண்டாகும்! ஆகவே இச்செய்தியினை அறிவிக்க இயேசுவுக்கு நீங்கள் தேவை! அன்று அவர் உயிர்த்தெழுந்த செய்தியை மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவிக்க தயங்கவில்லை. நாம் தயக்கங் கொள்ளலாமா?

ஒரு அடிமைப்பெண் சீரிய தேசத்திற்குத் தேவைப்பட்டாள். தன்னுடைய அடிமைத்தனத்தினை எண்ணி தன்னையே அவள் நொந்துகொண்டிருக்கவில்லை. தான் ஓர் பெரிய அந்தஸ்த்தில் இல்லையே, தான் ஒரு சிறந்த ஞானியாக இல்லையே, எனக்கு எந்த தகுதியுமில்லையே, அந்நிய நாட்டில் ஜீவனுள்ள தேவனைக் குறித்து என் எஜமானுக்கு நான் எப்படிச்சொல்லுவேன் என்னுடைய ஜீவனுக்கு ஆபத்துவந்துவிடுமே என்றெல்லாம் அவள் சிந்திக்கவில்லை. தான் அறிந்து கொண்ட தன் தேவன் ஜீவனுள்ளவர், இந்த தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை, இந்த தேவன் தன் எஜமானுக்கு சுகமளிக்க முடியும் என்று எண்ணி, "அவள் தன் நாச்சியாரைப் (எஜமாட்டியைப்) பார்த்து, என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்" (2இராஜா.5:3). அந்தப்படியே சீரிய ராஜாவின் படைத்தலைவன் நாகமான் போய் சுகம்பெற்றான். "...அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்" (2இராஜா.5:1). ஒரு அடிமைப் பெண் கூறின நற்செய்தி அந்த தேசத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவந்தது. அன்பு சகோதரியே, நம் தேசம் காக்கப்பட வேண்டாமா? எங்கு பாத்தாலும் வன்முறைகளும், கலவரங்களும், அன்புத்தாழ்ச்சியினால் கொலைகளும், கொள்ளைகளும், சமாதானமின்மையும் காணப்படுகின்ற இவ்வேளையில் நீங்கள் தேசத்திற்குத் தேவை. அன்பும்,

பரிசுத்தமும், உள்ள இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் உண்டாகும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அறிவிக்க நீங்கள் இயேசுவுக்குத் தேவை.

பழைய ஏற்பாட்டில் யோசியா ராஜாவின் காலத்தில் ஒரு பெண் தீர்க்கதரிசி வாழ்ந்து வந்தாள்.அவள் பெயர் உல்தாள். அவள் ஒரு வஸ்திரசாலை விசாரிப்புக்காரனின் மனைவி. அப்படியானால் ஒரு சாதாரண, உடைகள் வைக்கும் அறையின் பொறுப்பாளியின் மனைவி ஆனால் இவள் ராஜாவுக்கு அவனுடைய ஊழியக்காரர் மூலமாக கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லியனுப்பி ஒரு தீர்க்கதரிசியாக விளங்கினாள் *(2நாளா.34:21-28)*. இவளைக் குறித்து *2நாளா.22*-ல் இவள் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்தாள் (அதாவது நடுத்தரவகுப்பில்) என்றும் வாசிக்கிறோம். ஒரு சாதாரண பெண் தன்னுடைய ராஜாவுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லியனுப்பினாள் என்றால் நாமும்கூட நம்முடைய சமாதானக் கர்த்தரின் சுவிசேஷத்தையும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும் தேசத்திற்கு அறிவிக்க முடியுமே. இயேசுகிறிஸ்து திரும்பவும் வரபோகிறார் அவருடைய வருகைக்கு அடையாளமாக, "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; ...ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்... அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்" *(மத்.24:6-12)*. "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும் அப்போது முடிவு வரும்" *(மத்.24:14)* என்று வேதம் கூறுகிறது. மேற்கூறிய சம்பவங்கள் இன்று நடக்கவில்லையா? நடக்குமானால் இராஜ்யத்தின் சுவிசேஷச் செய்தியினை தேசத்திற்கு அறிவித்து தேசத்தை அழிவுக்குத் தப்புவிக்க இயேசுவுக்கு நீங்கள் தேவை.

அன்று பிலேயாம் என்ற தீர்க்கதரிசிக்கு புத்திசொல்ல ஒரு கழுதை தேவைப்பட்டது. பிலேயாமின் வழி கர்த்தருக்கு மாறுபாடாயிருந்ததனால் கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார் *(எண்.22:21-33)*. நீங்கள் எப்பேர்பட்டவர்களாயிருந்தாலும் கர்த்தருக்கு நீங்கள் தேவை. அவர் உங்களை தம்முடைய ராஜ்யத்தில் அல்லது தம்முடைய அரசாங்கத்தில் பணிபுரிய அழைக்கிறார். உங்களால் கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளமுடியவில்லை யென்றால் ஜெபிக்கமுடியுமே. அன்பு சகோதரியே, நீங்கள் எப்போதும் எந்நிலையிலும் கர்த்தருக்குத் தேவை என்பதை மறந்துபோகாதீர்கள்.

இயேசுவின் நாட்களில் அநேக ஸ்திரீகள் இயேசுவோடுகூட ஊழியத்தில் ஈடுபட்டிருந்தனர். காலம் செல்லாது கிறிஸ்துவின் வருகை

மிகச்சமீபம். ஒரு திரளான கூட்டமோ அல்லது உங்கள் தேசமோ அல்லது உங்கள் ஜனமோ அல்லது குடும்பமோ நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தள்ளப்பட்டு போய்விடாதபடிக்கு அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க, ஜீவனுள்ள மார்க்கத்தை அறிவிக்க, ஜீவனுள்ள தேவனை அடையாளம் காட்ட அல்லது அவர்களுக்காக ஜெபிக்க நீங்கள் தேவை. இன்றே நற்செய்தியை அறிவிக்கும் நாள் புறப்படுங்கள். இல்லையேல் திறப்பின் வாசலில் நின்று இரவு பகலாக ஜெபியுங்கள். இயேசுவின் அரசாங்கத்தில் பணியிடங்கள் அநேகம் உண்டு. அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம். எனவே நீங்கள் இயேசுவுக்கு தேவை இன்றே பணியில் சேருங்கள். கர்த்தர் உங்களை வழிநடத்தி, ஆசீர்வதிப்பாராக!

## ஊழியனே உன் ஊழியம் எப்படிப்பட்டது?

| | |
|---|---|
| ✦ ஒரே இடத்தில் உட்கார்ந்து கொண்டா? | அவர்... கிராமங்களிலே சுற்றித்திரிந்து உபதேசம் பண்ணினார் (மாற்.6:6). |
| ✦ உறவினர் மத்தியில் மட்டுமா? | உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன? (மத்.5:47). |
| ✦ கட்டிடத்தின்மேல் கட்டிடம் கட்டிக்கொண்டா? | மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை (லூக்.9:58). |
| ✦ ஆகாயத்தில் பறந்து கொண்டா? | ஆகாயத்தில் ஏறி ஆழங்களில் இறங்குகிறார்கள் (சங்.107:26). |
| ✦ இரண்டு எஜமான்களுக்கா? | தேவனுக்கும் உலக பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது (மத்.6:24). |
| ✦ மற்றவர்களைக் குற்றப்படுத்திக்கொண்டா? | அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திரவாதி (ரோம.14:4). |


### ஜெபியுங்கள்

☆ மே மாத கூட்டங்களை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
☆ கிருஷ்ணகிரி வேதாகம பயிலகத்திற்காக...
☆ ஜூன் மாதம் அனைத்து பிள்ளைகளின் படிப்பு தேவைகள் சந்திக்கப்பட...
☆ வளர்ந்து வரும் கர்த்தருடைய சபை தொடர்ந்து ஆசீர்வதிக்கப்பட...
☆ கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறவர்கள் மனந்திரும்பும்படியாக...



# சாத்தானின் யுத்தம்
# Satan`s War

-Walekeni Moster L.Nyrienda - (VOTI)



*"வானத்திலே யுத்தமுண்டாயிற்று: மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை" (வெளி.12:7).*

**முன்னுரை:** தேவனுக்கும் சாத்தான் மற்றும் அவனுடைய தூதர்களுக்கு மிடையில் யுத்தம் உண்டு. சாத்தான் பரலோகத்திலிருக்கிற தேவனுக்கு எதிராக யுத்தம் செய்யத்துவங்கி விட்டான். சாத்தான் தோற்றுப் போனாலும் கூட, அவன் இன்றுவரை தொடர்ந்து யுத்தம் செய்துகொண்டிருக்கிறான் *(1பேது.5:8).*

**இந்த யுத்தத்தில் தேவனுடைய ஆயுதங்கள்:**

1. தேவனுடைய வார்த்தை *(யோவா.6:63).*
2. விசுவாசமும் மற்ற ஆயுதங்களும் *(எபே.6:1–18).*
3. ஜெபம் *(லூக்.22:40,46).*
4. எதிர்த்து நிற்பது *(யாக்.4:7,8).*

**சாத்தானுடைய ஆயுதங்கள்:**

பிரதானமான ஆயுதம் வஞ்சித்தல், தாக்கும் குறி, மனிதன் *(கலா.1:13,14; சவுல் சபையை அழிப்பதற்கு பயன்படுத்தப்பட்டான்)*

- ✦ சாத்தான் ஆதாமை வஞ்சித்தான் *(ஆதி.3:18,19).*
- ✦ அவன் நோவாவின் நாளிலிருந்த ஜனங்களை வஞ்சித்தான் *(ஆதி.6:1-7).*
- ✦ சாத்தான் யூதாஸ்காரியோத்தை வஞ்சித்தான் *(யோவா.18:2-5)*

**தலையாகிய இயேசுவை அழிப்பது சாத்தானின் முயற்சி**

தேவனுக்கு விரோதமான தன்னுடைய யுத்தத்தில், இயேசுவை கொலை செய்வதின்மூலம் இரட்சிப்பின் திட்டத்தை சாத்தான் அழிக்க விரும்பினான். உண்மையாகவே, இயேசுகிறிஸ்து மரித்தார். தேவன் இயேசுவை மரணத்திலிருந்து உயர்த்தி பிசாசின் திட்டத்தை முறியடித்தார். ஆனபடியினால், அவருடைய மரணம் இரட்சிப்பின் வழியானது. சாத்தான் முடிவாக யுத்தத்தில் தோற்றுப்போகிறான் *(வெளி.17:14).*

**சரீரமாகிய சபையை அழிப்பதே சாத்தானின் முயற்சி**

சாத்தான் இயேசுவின் சரீரமாகிய சபையை அழிப்பதற்கு பிரபலமானவர்களை பயன்படுத்தினான்:

1. அவன் கிளர்ச்சியைத் தூண்டி, ஸ்தேவானைக் கொலைசெய்யும்படி பரிசேயர்களைப் பயன்படுத்தினான் (அப்.7:59,8:2)

2. அவன் சபையைப் பாழாக்கி சிதறிப்போகப்பண்ண சவுலைப் பயன்படுத்தினான் (அப்.8:3,4).

3. அவன் கிறிஸ்தவர்களை பயமுறுத்தவும், சிறையிலடைக்கவும், கொல்லவும் ஆலோசனை சங்கத்தைப் பயன்படுத்தினான் (அப்.4:14-18).

4. அவன் யாக்கோபைக் கொலைசெய்யவும், பேதுருவை சிறையிலடைக்கவும் ஏரோதை பயன்படுத்தினான் (அப்.12:1-3).

5. அவன் சபையைப் பாழாக்கும்படிக்க யூதமார்க்கத்தில் பக்திவைராக்கியமாயிருந்த சவுலை பயன்படுத்தினான் (கலா.1:13,14; அப்.9:1).

## கிறிஸ்துவின் சபையைப் பாழாக்குவதே சாத்தானின் தற்போதைய முயற்சி

தேவனுக்கு விரோதமான அவனுடைய தொடர்ச்சியான யுத்தத்தில், சாத்தான் திட்டங்களை உருவாக்குவதிலும், யாரையாவது வஞ்சித்து, அந்த நபரை அழிவின் ஆயுதமாகப் பயண்படுத்தும்படி உலகமுழுவதும் சுற்றித் திரிவதிலும் மிகவும் தீவிரமுள்ளவனாக இருக்கிறான் (1பேது.5:8). அவன் இந்த 21-ம் நூற்றாண்டில் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு விரோதமாக தன்னுடைய பிசாசுக்குரிய விக்கிரகாராதனையையும், சாத்தானுக்குரிய கிரியையும் உருவாக்கியிருக்கிறான் (வெளி.2:9; 1தீமோ.4:1,2; 2தீமோ.4:3,4).

## தேவனுடைய எச்சரிப்பு

தேவன் ஒவ்வொரு சபை வழிநடத்துனர்களையும் பீறிப்போடும் ஓநாய்களுக்கு ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரித்துக் கொண்டிருக்கிறார் (அப்.20:28). விழித்திருங்கள் (எபி.3:12; 2தீமோ.4:5). சாத்தான் ஜீவனுள்ள தேவனுக்கு விரோதமான தன்னுடைய யுத்தத்தில் கர்த்தருடைய சபையை அழிக்கும்படி ஒருவேளை உங்களை அல்லது என்னை பயன்படுத்தலாம். அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் (1பேது.5:9), தேவனிடத்தில் நெருங்கிச் சேருங்கள் (யாக்.4:7,8). ஆமென்.

## சாத்தான் யுத்தத்தைத் தொடருகிறான்

தேவனுக்கு எதிராக சாத்தான் தொடர்ந்து யுத்தஞ்செய்கையில் (1பேது.5:8). தேவனுடைய ஆவிக்குரிய வீடாகிய சபையில் கண்டுகொண்ட இரட்சிப்பை விட்டு விலகச் செய்யும்படி மனிதனை பயன்படுத்த குறிவைக்கிறான்.

A. சாத்தான் ஒருவேளை இதை பயன்படுத்துவான்:

1. நோவாவின் காலத்தில் நடந்ததுபோல ஒரு கூட்ட ஜனங்களை (ஆதி.6:1-7).

2. இயேசுவின் சிலுவை நாட்களில் இருந்த பரிசேயர்கள், சதுசேயர்கள், வேதபாரகர்கள்.

3. ஸ்தேவானை கல்லெறிந்த பரிசேயர்கள் (அப்.7:59).

4. யோவானின் நாட்களில் சபையில் பயன்படுத்தப்பட்ட பலவீனமானதும் உலகப் பொருட்களும் (வெளி.2-3).

சாத்தான் உண்மையான சபையை அடையாளம் கண்டுகொள்ளக் கூடாமல் மக்கள் குழப்பமடையும்படிக்கு பிரிவினை சபைகளை பயன்படுத்துவான். சிலசமயங்களில் கர்த்தருடைய சபையிலே ஒரு கூட்ட ஜனங்கள் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு எதிராக பயன்படுத்தப்படும்படி தங்களை தாங்களே ஒப்புவிப்பார்கள். எப்படியோ, ஆவிக்குரியவைகளை தவறாகப் போதிக்கிற ஒருவன், தன்னை 'கிறிஸ்தவன்' என்று அழைத்துக்கொண்டாலும் கூட, அவன் சாத்தானின் ஆயுதமாக மாறுகிறான். சிந்தியுங்கள்! பிசாசு உங்களுடைய பிராந்திய சபையை அல்லது உங்களுடைய பிராந்திய சபையில் ஒரு கூட்ட ஜனத்தை தேவனுக்கு எதிரான ஆயுதமாக பயன்படுத்துகிறானா? பதில் ஆம் என்று இருந்தால், மனந்திரும்பி, தேவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு வேதவாக்கியங்களுக்குத் திரும்புங்கள்.

**B.** சாத்தான் தேவனுக்கு எதிரான ஆயுதமாக தனிப்பட்டவர்களையுங்கூட பயன்படுத்துகிறான்:

1. அவன் சபையைத் துன்பப்படுத்தும்படி சவுலை பயன்படுத்தினான் (அப்.9:1,2).

2. அவன் தேவனுடைய ஊழியத்தை விட்டு விலகி விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடும்படி இமெநேயுவையும் பிலேத்துவையும் வஞ்சித்தான் (2தீமோ.2:16-18).

3. சாத்தான் பிகெல்லு மற்றும் எர்மொகெனே போன்றோரை ஆரோக்கியமான சத்தியத்தை விட்டு விலகும்படி வஞ்சித்தான் (2தீமோ.1:15).

4. யந்நேயும் யம்பிரே மற்றும் அலெக்சந்தர் செய்ததுபோல சிலர் உலக இச்சைகளுக்கு இழுக்கப்பட்டு போவார்கள் (2தீமோ.3:8;4:14).

*முடிவுரை:* என் அன்பு சகோதரனே, சாத்தான் மிகத் தந்திரமுள்ளவன். அவன் தேவனுடைய பண்ணையில் முரண்பாடுகளை விதைப்பதன் மூலம் உங்களை அல்லது என்னை சபைக்குத் தொந்தரவு கொடுக்க அல்லது சபையை அழிக்க பயன்படுத்தக்கூடும் (1கொரி.1:10,11; நீதி.6:16-19 ஐ வாசிக்கவும்). அவன் ஜனங்களை வஞ்சிக்கும்படி அனுப்பப்கூடிய தன்னுடைய கூட்டாளிகளைஇவ்வுலகில் கொண்டுள்ளான்: "....அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்" (2கொரி.11:13-15). நாம் தேவனுடைய

*சத்திய வார்த்தையை விட்டு விலகினால் யாரோ ஒருவர் - அல்லது நான் - அவனுடைய தூதர்களில் ஒருவனாக இருக்கலாம்.*


*"வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; ...உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். .... பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சகாலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்" (வெளி.12:9,12).*

*சாத்தான் ஜீவனுள்ள தேவனுக்கு எதிரான தன்னுடைய யுத்தத்தில் ஒரு வினாடிகூட நிறுத்தாமல் அல்லது ஓயாமல் வேலை செய்தாலும், அவன் ஜெயிக்கமாட்டான். அவன் ஒரு தோல்வியின் யுத்தத்தைப் போரிட்டுக்கொண்டிருக்கிறான். ஆட்டுக்குட்டியானவரும் அவரோடு கூட இருப்பவர்களும் எப்போதும் ஜெயிப்பார்கள் (வெளி.17:14; ரோமர்8:31,37).*

*சகோதரனே, நாம் கிறிஸ்துவின் மூலம் வெற்றிவீரர்களைக் காட்டிலும் மேலானவர்களாயிருக்கும் பொருட்டு விழிப்புள்ளவர்களா யிருந்து விசுவாசத்தில் நிலைத்திருப்போமாக.*

## யார் வேதாகமத்தை வாசிக்க வேண்டும்?

வாலிபன் – எப்படி வாழ்வது என கற்றுக்கொள்ள
வயதானவர் – எப்படி மரிப்பது என தெரிந்துகொள்ள
அறியாதவர் – ஞானத்திற்காக
கற்றவர் – தாழ்மைக்காக
பணக்காரர் – இரக்கம் செய்வதற்காக
ஏழை – ஆறுதலடைவதற்காக
பெலவீனர் – வழிகாட்டுவதற்காக
அகந்தையுள்ளவர் – எச்சரிப்புக்காக
தாழ்மையுள்ளவர் – உயர்த்தப்படுவதற்காக
துயரப்படுகிறவர் – சமாதானத்திற்காக
களைப்படைந்தவர் – ஓய்வுக்காக
சந்தோஷப்படுபவர் – நம்பிக்கைக்காக
பாவி – இரட்சிப்பிற்காக
கிறிஸ்தவர் – போதிப்பதற்காக



# பொது அறிவுக் களஞ்சியம்

## மத சார்பற்ற அரசு
## SECULAR GOVERNMENT

இந்திய அரசு எந்த ஒரு தனிப்பட்ட சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல. அதனால் இது மத சார்பற்ற அரசாக விளங்குகிறது. அரசு எந்த சமயத்தின் கோட்பாடுகள் மற்றும் கருத்துக்களில் தலையிடாது.

இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், சமணர்கள், பௌத்தர்கள் என்று பல்வேறு சமயத்தவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க உரிமை தரப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் சமயக் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், பிரச்சாரம் செய்யவும், வளர்க்கவும் உரிமையளிக்கப்பட்டுள்ளது. எனினும் இச்செயல்கள் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதிக்காத வகையிலும், பிற சமயத்தவர்களின் உணர்வுகளைப் பாதிக்காத வகையிலும் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்காத வகையிலும் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. இது நமது இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகளில் ஒன்று.


*எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது ரோமர்12:1*

### வேத அறிவுப் போட்டி எண் 93-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| K. மோகன் | -கோமாரபாளையம் |
| D. யேசுதாஸ் | -சித்தூர் (ஆந்திரா) |
| N.கமலவேணி | - சென்னை |
| M.இராஜேஸ்வரி | -சிக்கல் |
| J.நிர்மலாஜான் | -மதுரை |
| P.சரவணகுமார் | -புதுபாளையம் |
| R.பால் சாமுவேல் | -பிடாரியூர் |
| R.அருண்குமார் | -பிடாரியூர் |
| G.A.ஜான்சன் | -தலைமலைபட்டி |
| IRA. எத்திராஜன் | -சங்கரி |
| J. விக்டோரியா | -ஜெபஞானபுரம் |
| S. சசிகுமார் | -மணலி |
| S. தண்டபாணி | -சிலுவத்தூர் |
| G.P. ஏசையன் | -கோபி |
| S.கோமதி | -கல்வெட்டு |

### வேத அறிவுப் போட்டி எண் 93-ன் விடைகள்

1. நேர்ந்து கொள்ளாதிருப்பதே -பிர.5:5
2. ஆம் -யோ.12:11
3. நீதியைக் -ஏசா.26:9
4. அப்போஸ்தலருக்கு -அப்.1:5
5. வீணாயிருக்கிறது, தச்சன் -ஏரே.10:3
6. தாவீது, ரோமருக்கு -ரோம.4:8
7. நரிகளுக்கு, எசேக்கியேல் -எசே.13:4
8. பவுல் -1கொ.9:27
9. தரியு -தானி.6:18
10. 2கொரிந்தியர் -2கொ.1:4



"நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன்" –சங்.119:127

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -9

## ஆசாரியர்கள்: தேவன் மெல்கிசேதேக்கு, முற்பிதாக்கள், யூதஆசாரியர்கள், இயேசுகிறிஸ்து, மற்றும் நாம்

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378

-சென்ற மாதஇதழ் தொடர்ச்சி...



*ஆசாரியர்களின் தகுதி:* ஆசாரியன் அங்கவீனமுள்ளவனாக, குருடனாக சப்பாணியாக காலொடிந்து, கையொடிந்தவனாக... ஆசாரியப் பணிபுரிய தகுதியற்றவன் (லேவி.21:17-23). ஆசாரியர்களுக்கு அவர்களுடைய தேசத்தில் ஒன்றையும் சுதந்தரித்துக்கொள்ளக்கூடாது ஆனால் மற்றவர்கள் எல்லாரும், எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுக்கவேண்டும். ஆசாரியர்கள் ஆரோன் காலத்திலிருந்து சவுல் இராஜா காலம் வரை (கி.மு.1500-1100) வாழ்ந்த ஆசாரியர்கள் பலர் ஆப்கானிஸ்தானத்தின் வழியாக தொடந்து கைபர், போலன் கணவாய் வழியாக இந்தியாவின் வட பகுதிக்கு வந்தவர், முதலில் சிந்து வெளியிலும் பிறகு இந்தியா முழுவதும் பரவி "இந்து" மதத்தை உண்டாக்கி பாமர மக்களிடமிருந்து 32 வகையான பொருட்களை கடவுள் பெயரால் வற்புறுத்தி வசூலித்தனர் இவர்கள் துயரத்தை நேரில் கண்ட புத்தர் கி.மு.6-ம் நூற்றாண்டில் அவர்களை கண்டித்து, அவர்கள் கூறும் கடவுளுக்கோ அல்லது ஆசாரியனுக்கு காணிக்கை கொடுக்கக்கூடாது என்றும், கடவுள் பிச்சைக்காரன் இல்லை என்றும் கூறினர். மேலும் அதனை ஆசாரிய (PRIESTCRAFT) ஆட்சி என்றதினால் வெகுண்டெழுந்த ஆசாரியர்கள் புத்தமத துறவிகளுக்கு பல தொல்லைகள் கொடுத்ததினால், இந்தியாவில் தோன்றிய அம்மதம் நாளடைவில் தம் சொந்த மக்களிடையே ஒற்றுமை குறைந்ததினால் சங்கராச்சாரியார், இராஜகோபாலாசாரியர் போன்ற பல ஆசாரியர்களின் வலிமையினால் புத்தமதத்தினர் இந்தியாவை விட்டு துரத்தப்பட்டனர். தங்கள் உயிர்பிழைக்கவிரும்பிய அம்மக்கள் (இலங்கை) ஸ்ரீலங்கா, பாங்காங், ஹாங்காங், சீனா, ஜப்பான் ஏன் மேலை நாடுகளில் தஞ்சம்புகுந்தனர். Dr. அம்பேத்கர் புத்தமதத்தை அவர்களின் பல லட்சம் தொண்டர்களுடன் (16.10.1956-ல்) தழுவிய போதும் இன்னும் அம்மதத்தினர்களுக்கு அரசு முழுசலுகை அளித்தும்கூட (கிறிஸ்தவர்களுக்கு இல்லை) எண்ணிக்கை மிகவும் சொற்பமே!

**ஆசாரியர்களின் கடமைகள்**

தலையாய பணியாக, தேவனை மனிதனுக்கு முன்பாகவும் மனிதனை தேவனுக்கு முன்பாகவும், இவர்களிடையே மத்தியஸ்தனாகவும், தேவகட்டளைகளை போதிப்பவனாகவும், அதனை கைக்கொண்டு நடக்கவும், தேவனுக்கு பலிசெலுத்தி, ஆராதிக்கவும் வழிகாட்டினர் (உபா.33:10) 2நாளா.17:10 மக்களின் பாவங்களுக்காவும், தனது பாவங்களுக்காவும் பலிசெலுத்த அவர்களிடேயே 24 பிரிவினர் தம்தம் வரிசை முறைமையின்படியே ஆசாரியர்களாக செயல்பட்டனர். 2நாளா.24:7-18 லூக்கா.1:5-9.

**இயேசுகிறிஸ்து மகா பிரதான ஆசாரியர்:**

சதுசேயரும், பரிசேயரும் எவ்வளவுக்கதிகமாய் இயேசுகிறிஸ்துவை

பகைத்தார்களோ, கேவலமாய் நடத்தினார்களோ, அதற்கு பதிலாக இயேசுகிறிஸ்து (அப்போஸ்தலர்களும்கூட) அவர்களை அதிகமாக மதித்து வந்ததுடன், தன் வாழ்நாளில் வாழ்ந்த மக்களிடம் நியாயப்பிரமாணத்தை எல்லாரும் கீழ்ப்படிந்து நடக்கவும், கைக்கொள்ளவும்போதித்தார் எடுத்துக்காட்டாக; குணமாக்கப்பட்ட குஷ்டரோகிகளை "நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள்" லூக்.17:12-14. மேலும் ஒரு குஷ்டரோகி குணமாக்கப்பட்ட பின்பு அவர் அவனை "நீ போய் ஆசாரியனுக்கு உன்னை காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டிருக்கிறவைகளை அவர்களுக்குச் சாட்சியாக (காணிக்கை) செலுத்து என்று கண்டிப்பாய் சொல்லினார் "மாற்கு1:44. ஆனால் ஆசாரியர்கள் அனைவருமே அவரை மிகவும் பகைத்து கேலிசெய்து பொறாமை கொண்டனர். குறிப்பாக யூத உயர் நீதிமன்றத்தலைவர்கள், ஆலோசனை சங்கத்தினர் அவரின் சிலுவை மரணத்திற்கு காரண கர்த்தராக செயல்பட்டனர். அதுவுமின்றி உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைக் குறித்து பிரசங்கித்த அப்போஸ்தலர்களையும், தொடக்க கால சபையாரையும் துன்புறுத்தினார்கள் (அப்.8:1). தேவமகனான இயேசுகிறிஸ்து, மனிதனாக பிறந்து, நமக்காக பாவ நிவாரணபலியானார், நம்மெல்லாருக்கும் மகா பிரதான ஆசாரியரானார். (பரிசுத்த பலியை நமக்காக செலுத்தி, பரிசுத்தராகவும், மகாபிரதான ஆசாரியருமானார் (எபி.2:9-14). மேலும், "ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமையானவர்கள் யாவரையும் பாவத்திலிருந்து விடுதலையாக்கினார்.

இயேசுகிறிஸ்துவின் தியாகபலியினாலே சபை நிறுவப்பட்டது. அதற்காக இயேசு தம்மை முன்மாதிரியாக கூறினார் . மாற்கு10:45. ஊழியம் செய்ய அனேகரை மீட்க, ஜீவனைக்கொடுக்க வந்தார் நீதியுள்ளவரும், விசுவாசமாயிருக்கிறவர்களை நீதிமானாக்குகிறவருமாய்... கிருபாதார பலியானார் ரோம.3:25-26. நியாப்பிரமாணம் செய்யக்கூடாததை... தமது குமாரனை... பாவத்தின் சாயலாகவும் ... பாவத்தைப்போக்கும் பலியாகவும் பாவத்தை... தீர்த்தார்... ரோம.8:3. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோம.8:34). கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் எபேசியர் நிருபம் முதற்கொண்டு எபிரெய நிருபம் வரை வெகு மேன்மையாகவும் விசேஷமாகவும் கூறப்பட்டிருக்கிறது எபி.8:1-6 இவை சங்.110:4 சொல்லப்பட்டிருப்பதற்கு இணங்க மெல்கிசேதேக்கு முறைமையில் அசலாக அறிகிறோம். எபி.7:11-19 ஐ வாசித்து முழு தெளிவு பெருவோமாக!

பரிசுத்தத்தையும், ஆசாரியத்துவத்தையும் யாருமே பிரிக்க முடியாது. ஆனால் பாவசுபாவமுள்ள (Nature) ஆசாரியர்கள் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்ட ஆசாரிய ஊழியத்தில் பிரவேசித்தனர். சீனாய் மலையிலே (யூதர்களுக்கா மட்டும்) கொடுக்கப்பட்ட ஆசாரிய ஊழியம் இன்று பல பொலிவுடன். மாறாத நம்பிக்கையுடன் வெகு சிறப்பாக "உலகெங்குமுள்ள அனைத்து மக்களுக்கும் ஆசாரிய ஊழியம் செய்ய கட்டளை பெற்று இருக்கிறோம் (மத்.28:19,20). இது மத்.10:5,6 யூதர்களுக்கு மட்டும் என்பதும் உலகமக்களுக்கும் என்பதை அறிக மறுமலர்ச்சி என்பதை சிந்திப்போமாக. இன்றைய கிறிஸ்தவர்கள் அனைவரும் ஆசாரியர்கள்: நீங்களோ (நாம்) உங்களை அந்தகாரத்தினின்று... ராஜரீகமான ஆசாரியகூட்டமாயும்...(1பேது.2:9). நம்மை ஆசாரியர்களுமாக்கினார் வெளி.1:6;5:10. ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவோமாக வெளி.20:6.

சிறுவர் பகுதி

# கானா ஊரிலே இயேசு செய்த இரண்டாம் அற்புதம்

**வேதபகுதி: யோவான் 4:46-54**



கானா ஊர் என்றாலே உங்களுக்கு ஞாபகம் வந்துவிடும். இங்கு தான் இயேசு தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார். இந்த கானா ஊருக்கு ஆண்டவர் மறுபடியும் சென்றபோது, இயேசு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட ராஜாவின் மனுஷன் ஒருவன் அவரிடத்திற்குப் போய் தன் மகன் மரண அவஸ்தையாயிருக்கிறான். அவனைக் குணமாக்கவரவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான். அதற்கு அவர் நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள் என்றார். அவனோ என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும் என்று துரிதப்படுத்தினான். இயேசு அவனை நோக்கி நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அதற்கு அந்த மனுஷன் மாறுதரமாக ஒன்றும் பேசாமல் அப்படியே இயேசுவின் வார்த்தையை நம்பிப்போனான். அந்த மனுஷன் போகையில் அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள். அப்பொழுது அவன் எந்த மணிநேரத்தில் சுகமானான் என்று கேட்டான். அதற்கு அவர்கள் நேற்று ஏழாம்மணிநேரம் என்றார்கள். இயேசு உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று சொன்ன மணிநேரம் அதுவே என்று அவன் அறிந்து அவன் வீட்டாரனைவரும் இயேசுவை விசுவாசித்தார்கள்.

பிரியமான தம்பி, தங்கைகளே! நீங்கள் இந்த மனுஷனைப்போல இயேசுவை விசுவாசித்ததுண்டா? மரண அவஸ்தையாயிருந்த அந்த மனிதனுடைய மகனை இயேசு சந்திக்கவும் இல்லை. அவனுக்கு என்ன வியாதி பிடித்திருக்கிறது என்று கேட்கவும் இல்லை. தம்மால் சுகமாக்க முடியும் என்று நம்பி வந்த அந்த மனுஷனைப் பார்த்து நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! டாக்டர்கள் பரிசோதித்து நோயை அறிவார்கள். சுகமாக இரண்டு மூன்று மாதமாவது ஆகும் என்பார்கள். ஆனால் இவரோ சொன்ன நிமிடத்தில் சுகமாக்குகிறவர் இப்பேர்பட்ட அற்புதரை நமக்குத் தந்த தேவனை நன்றியோடு துதிப்போம்.

சார் ஒரு கேள்வி: எப்படி இந்த மனுஷனுக்கு இப்படிப்பட்ட நம்பிக்கை வந்தது? தம்பி, அவன் கானா ஊரில் இயேசு செய்த முதலாம் அற்புதத்தைக் கேள்விப்பட்டிருக்கக்கூடும், ஆகையால் இயேசுவை விசுவாசித்து தன் மகனை சுகமாக்கும்படியாக அவரை வேண்டிக்கொண்டான். நாமும் அவருடைய அற்புதங்களை வேதாகமத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம். ஆகையால் நாமும் இந்த மனிதனைப்போல இயேசுவை நம்பி நம் வீட்டாரோடு சேர்ந்து விசுவாசிப்போம்.

**மனப்பாட வசனம்**

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" எபி.11:1

# வேத அறிவுப் போட்டி எண்.94

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. எவனுடைய அக்கிரமம் கட்டிவைத்திருப்பதாகவும், அவன் பாவம் பத்திரப்படுத்தப்பட்டிருப்பதாகவும், எந்த தீர்க்கன் மூலம் கர்த்தருடைய வசனம் உண்டானது?
2. நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், எதற்கேற்றபடி நடக்கவும் கடவோம்?
3. சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும், அக்காலத்திலும்... பலவீனனும் தன்னைப் எப்படியென்று சொல்வானாக என்று கர்த்தர் தீர்க்கதரிசியின் மூலம் உரைத்தார்?
4. எவனுக்கு இடங்கொடாமலும் இருங்கள் என்று பவுல் எச்சரிக்கிறார்?
5. புத்திமான் அந்தக் காலத்திலே மௌனமாயிருக்கவேண்டும்; அந்தக் காலம் எப்படிப்பட்ட காலம்?
6. அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
7. நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன்கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை என்ன செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
8. போஜனம் பானம், பண்டிகை, மாதப்பிறப்பு, ஓய்வுநாள்... அவைகள் வருங்காரியங்களுக்கு எப்படியிருக்கிறது, அவைகளின் பொருள் எவரைப்பற்றினது?
9. என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தேன், அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது என்ற தீர்க்கன் யார்?
10. பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும், தலைச்சீராவையும் என்ன செய்து கொண்டிருக்கக்கடவோம்?

**"நீங்கள் ஒருவரினொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:35).**

**BATLAGUNDU CHRUCH OF CHRIST** **ஆராதனை நேரம்**



Meets Here

ஞாயிறு காலை 8.30 மணி

தேவனை ஆவியோடும், உண்மையோடும், தொழுது கொள்ள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

17-2-102 D/5, Rajan Nagar
Batlagundu - 624 202,
Dindigul Dist

**உங்கள் வானொலியில்** இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்

**உங்கள் தொலைக்காட்சியில்**

TAMILAN TV - Every Monday 6.00 a.m. VASANTH TV - Every Tuesday 6.30 a.m.
IMAYAM - Every Thursday 6.15 a.m.

**மாத இதழ் மற்றும் வேதபாடம்** தேவைக்கு உடனே ரூ. 15/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

Radio &TV யில் வெளி வந்த தேவ செய்திகள் அடங்கிய CD & DVD க்கள் விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுவோர் ரூ.100/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.


**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India ✆ 04543 263278 Mobile : 94435 58041
E-mail : thewordofchrist@sancharnet.in


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**

**மாத இதழின் ஆண்டு சந்தா**

இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-


Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24, Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan

Registered with Registrar of Newspapers for India under No. TN/SR- 164/ 2006-2008 Licensed to Post without prepayment License No. TN/WPP-25/SR/ 2006 - 2008 Posted at Batlagundu Post Office 10th June 2008


To

**Monthly Magazine**

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India